புதுக்கோட்டை மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

(26-09-2015 – 30-09-2015)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 25-09-2015

**கடந்த கால வானிலை 22-09-2015 முதல் 24-09-2015 வரை**

| காரணிகள் | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 0.3 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 38-39 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 27 |
| மேக மூட்டம் | 4-6 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 35-73 |
| காற்றின் வேகம்(கி.மீ / மணி ) | 10-16 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 30-09-2015 - 8.30 மணி நேரம் வரை**

| காரணிகள் | 26.09.15 | 27.09.15 | 28.09.15 | 29.09.15 | 30.09.15 |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 4 | 18 | 19 | 10 | 18 |
| அதிக பட்ச வெப்பநிலை(செ) | 36 | 34 | 34 | 34 | 34 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 26 | 24 | 24 | 24 | 24 |
| மேக மூட்டம் | 5 | 7 | 7 | 7 | 7 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 86 | 86 | 85 | 86 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 68 | 75 | 75 | 74 | 75 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 15 | 15 | 15 | 15 | 15 |
| காற்றின் திசை | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு |

குறுஞ்செய்தி :

அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை: லேசான முதல் மிதமான வரை மழை பெய்ய வாய்ப்புள்ளது. வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்: நெல், மக்காச்சோளம் மற்றும் கரும்பு**

**பருவம்: குறுவை–** நெல் பூக்கும் மற்றும் முதிர்ச்சி பருவம், **மக்காச்சோளம்- அறுவடை பருவம்**

- அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது எனவே மண் மற்றும் பயிரின் வளர்ச்சியை பொருத்து தண்ணீர் பாய்ச்ச ஏற்பாடு செய்யலாம்.
- நெல்லில் குலை நோயினைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு ஹனோசான் 200 மி.லி. அல்லது டிரைசைகலசோல் 200 கிராம் தெளிக்கவும். முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஏக்கருக்கு சூடோமோனோஸ் ப்ளுரசன்ஸ் 500 கிராம் பவுடரை 200 மி.லி. தண்ணீரில் கலந்து மாலை வேளையில் தெளிக்கவும்.
- நெல் பயிரில் தாக்கும் பச்சைத் தத்துப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த Phosalone 35% EC 120 ml/litre தெளிக்கவும்.
- குறுவை நெற்பயிரில் பூக்கும் பருவ குறுவை நெற்பயிரில் பூக்கும் பருவத்தில் கருப்பு நாவாய் பூச்சி தாக்குதல் பரவலாக தென்படுக்கிறது. இதனைக் கட்டுப்படுத்த புரோப்பனொபாஸ் 50 இ.சி. மருந்தினை ஏக்கருக்கு 400மில்லி என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- நெற்பயிரில் பழுப்பு நிற நோய் காணப்பட்டால். அதனைக் கட்டுப்படுத்த விவசாயிகள் 10-15 நாட்கள் இடைவெளியில் 2-3 முறை மேன்கோசெப் 2 கிராம்/ லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க அறிவுறுத்தப்படுகின்றன.